புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது
புலி ஒரு காலமும் பணியாது
எந்த படை வந்த போதிலும் சலியாது 2

திசைமாறிடும் ஒளிரும் சூரியன்
அலையாதிடுமோ கிடையாது
எங்கள் நிலை மாறிடுமோ நடவாது 2

எல்லை தாண்டி வந்து உருவாகும் பகை
எம்மை ஆளவென்று சதி போடும் 2
முள்ளை மலர் என்று கதை பேசும்
சில மந்திகள் கொடிதாவும்
கொட்டிலுக்கு குரையில்லை
கொண்டு வந்ததேதும் இல்லை
கட்டுதற்கு ஆடையில்லை
மானம் இன்னும் சாக வில்லை
பட்டினிக்கு வட்டியில்லை வா வா
இனி குட்டனின்று வாழ்வதில்லை வா வா

புலி ஒரு காலமும் பணியாது

பகைவந்து பிடித்தது சுடுகாடு அதை
பறிப்போம் திடமாய் நடை போடு 2
மறு படி செய்வோம் பூக்காடு
வெள்ளி மலர்ந்திடும் பூக்காடு
நான் பிறந்த ஊரும் இல்லை
நட்டு வந்த வேரும் இல்லை
ஆதரவுக்காரும் இல்லை
ஆறுதற்கு நேரம் இல்லை
ஓர் உயிர் தான் யாவர்க்கும் வா வா
இனி சாவதேனும் ஓய்வதில்லை வா வா

புலி ஒரு காலமும் பணியாது

கண்ணில் பாய்கிறது நீரோட்டம் தமிழ்
களத்தில் கயவரது தேர் ஓட்டம் 2
மண்ணில் நடத்துவோம் போராட்டம் புலி
மறுபடி கொடியேற்றும்
பள்ளியில்லை பேரும் இல்லை
சொல்லி அழ யாரும் இல்லை
உள்ளம் அன்றி மிச்சம் இல்லை
உயிர் திறக்க அச்சம் இல்லை
போரெடுத்து வெல்வதற்கு வா வா
ஏங்கள் ஊர் பிடித்து செல்வதற்கு வா வா

புலி ஒரு காலமும் பணியாது

இசைதட்டு : சிட்டுவின் ஈழ கானங்கள்
பதிப்பகம் : அகம்